**மஸ்கெலியா பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஏப்ரல் 01 திகதி தொடக்கம் திசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 19 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஸ்கெலியா பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சபையினால் சபைக்கு வழங்கப்பட்ட கார் சபைக்குப் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | வாகனம் சபைக்குப் கையேற்கப்பட்டு அதன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டடம் என்பன தொடர்பாக வருடாந்த மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/ 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீத வரி அறவிடுவதற்காக காணி மதிப்பீடு 2010 ஆம் ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வீத வரி மற்றும் காணி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,561,162 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2018 ஏப்ரல் 01 இல் நிறுவப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|
| | 2018 | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | | | | |
| வாடகை | | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | | | | |
| ஏனைய வருமானம் | | | | |
| மொத்தம் | 16,053,950 | 14,818,650 | 7,053,430 | 7,769,220 |

## 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை இறைச்சிக் கடை வாடகை ரூபா 1,450,000 அறவிடுவதற்கு எவ்விதமான நடைமுறைகளும் கையாளப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை தொகை பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் ஒரு பகுதிக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் எவ்வித விடயங்கள் தொடர்பாகவும் உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதேச சபையின் அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு சபை தீர்மானித்திருந்தாலும் அது வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | இடைக்கால ஏற்பாடுகளை வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் மாதங்களில் வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) ஆயுர்வேத வைத்திய நிலையம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆயுர்வேத வைத்திய நிலையம் 2018 ஒக்தோபர் 04 ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்தது. | உடனடியாக சேவை வழங்குவதற்கு ஆரம்பிக்க வேண்டும். | உள்ளூராட்சிமன்ற ஆணையாளர் மூலம் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு வைத்தியர் ஒருவரை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய செயலாற்ற வேண்டும் | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கழிவுப் பொருள் சேரும் இடங்களில் கழிவுகளை முகாமை செய்வதனை வலுவூட்டுவதற்காக பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு சபைக்குக் கிடைத்திருந்த 43 கொம்போஸ்ட் தொட்டிகள் 3 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | கொம்போஸ்ட் தொட்டிகளை உடனடியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள அரச நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வங்கிகள் என்பனவற்றிற்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வகைப்படுத்தப்படாத கலவை கழிவுகள் நிலையத்தின் காணியில் புதைக்கப்பட்டதனால் அதற்கு அண்மையில் நடப்பட்ட பைனஸ் மரங்கள் அழிந்துள்ளதுடன் கழிவு நிலையத்தின் கழிவு நீர் இயற்கை சூழலுடன் சேர்கின்றது. | சுற்றாடல் மாசடையாத விதத்தில் குப்பைகள் முகாமை செய்யப்பட வேண்டும். | தற்போது கழிவுகள் வேறாக்கி வைக்கப்பட்டுள்ளதுடன கழிவு நீர் இயற்கை சூழலுடன் சேர்வதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (iii) | மலசலகூட கழிவு நீர் முகாமைத்துவத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,367,267 செலவிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்த தொகுதியின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்து அதனைப் பயன்படுத்தாத காரணத்தினால் அந்நிர்மாணப் பணிகள் நிறைவடையாது காணப்பட்டது. | இந்நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். | சபை அங்கீகாரம் கிடைத்த பின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலையை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க் கப்படு கின்றது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திராமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு நிறைவு | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் பற்றாக்குறை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு 2018 பெப்ரவரி 26 மற்றும் மே 17 ஆகிய தினங்களில் முகாமைத்துவத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 20 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 79 ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினரை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**(ஆ) ஊழியர் பிணை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880, 2003 ஏப்ரல் 11 ஆம் திகதிய சீபீசீ/06/06/02 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கை என்பனவற்றிற்கு அமைய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய பொறுப்பை நிறைவேற்றம் உத்தியோகத்தரிடம் இருந்து பிணை வைப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் | எதிரகாலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அம்பகமுவ பிரதேச சபையினால் பொறுப்பளிக்கப்பட்டிருந்த 35 காணித் துண்டுகளுக்கு உரிய உறுதிகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. | சபை காணிகளைப் பெற்றுக் கொண்டு உறுதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | காணிகளை முறையாகப் பொறுப்பேற்பதற்கு பிரதேச சபை செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 வாகன பாவனை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| i | சபைக்குச் சொந்தமான கெப் வண்டி 2018 திசெம்பர் 31 ஆம் திகதி தொடக்கமும் டிராக்டர் வண்டி 2018 மே மாதம் தொடக்கமும் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், 2018 நவெம்பர் 14 ஆம் வரையிலும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அனுமதி பெறப்பட்ட பின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 74,208 பெறுமதியான 414 புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானித்து திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய விதிப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான கூற்று வெளியிடப்படும். |

4.2 **உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர் பற்றாக்குறை காணப்பட்ட காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் இதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக் கூட்டம் ஒரு தடைவ மட்டுமே நடைபெற்றிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை கூட்டங்கள் உரிய முறைப்படி நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |